Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel:  +94 (1) 249-8100 ● Fax:  +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20170123

## இருதரப்புக் கூட்டுறவினை வளர்க்கும் அடையாளமாக ஐக்கிய அமெரிக்க ஹொப்பர் கப்பல் (The USS Hopper)

**கொழும்பு, 2016 ஜனவரி 23 :** ஐக்கிய அமெரிக்க ஹொப்பர் கப்பல் (The USS Hopper DDG 70) ஐக்கிய அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் அதிகரித்துவரும் உறவினைப் பலப்படுத்தவதற்கான விஜயத்தின் ஒரு பகுதியாக இன்று கொழும்பிற்குத் தனது ஐந்து நாள் துறைமுக அழைப்பினை பூர்த்தி செய்துள்ளதுடன், செப்ரெம்பர் 2016 இல் ஐக்கிய அமெரிக்க ஹொப்பர் கப்பலின் குழு உறுப்பினர் ஒருவரின் அவசர மருத்துவக்காப்பிற்கான வெளியகற்றலில் இலங்கைக் கடற்படையினரின் உதவிக்காக அவர்களுக்குத் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தது.

'இரு நாடுகளிற்கிடையேயான கூட்டுறவு' கடற்படையினர் இந்து பசுபிக் சமுத்திரப் பிராந்தியத்தில் கடலோரப் பாதுகாப்பினை அதிகரிக்கின்றனர் என்று இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் திரு. அத்துள் கேஷாப் அவர்கள் தெரிவித்தார். எமது ஐக்கிய அமெரிக்கக் கடற்படை மாலுமிகளின் ஆரோக்கியத்தினையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்கு இலங்கை சிநேகபூர்வமாக மற்றும் உடனடி உதவிகளை வழங்கியமை கூட்டுறவுச் செயற்பாட்டின் இன்னுமோர் உதாரணமாக அமைகின்றது என்று மேலும் தெரிவித்தார்.

இவ் விஜயத்தின்போது, ஐக்கிய அமெரிக்க மாலுமிகள் தமது இலங்கைச் சமதரப்பினருடன் விளையாட்டுக்கள் மற்றும் கலாசாரப் பரிமாற்றங்களில் இணைந்தார்கள் என்பதுடன் கடலில் மீட்பு மற்றும் கப்பல் ஆய்விற்கான தந்திரோபாயப் பயிற்சியினையும் பகிர்ந்து கொண்டார்கள். ஐக்கிய அமெரிக்கக் ஹொப்பர் கப்பல் உறுப்பினர்கள் கூட இலங்கையின் கலாசாரத்தினையும் விருந்துபசாரத்தினையும் நன்கு அனுபவித்தார்கள். மேலும், 1850 இல் முதலாவது ஐக்கிய அமெரிக்க வர்த்தக முகவராக நியமிக்கப்பட்ட ஜோன் பிளாக் மற்றும் அவரது துணைவியார் இசபெல் ஆகியோரின் கல்லறைகள் உள்ளிட்ட அனைத்துப் புனிதர்களின் புதைகுழிகளை மீளமைப்பதற்காகவும் திருத்தும் பணியை மேற்கொள்வதற்காகவும் மாலுமிகள் காலிக்குப் பயணம் செய்தார்கள்.

ஐக்கிய அமெரிக்க ஹொப்பர் கப்பல் தொடர்பான மேலதிக தகவலிற்காகத் தயவு செய்து பின்வரும் இணையத்தள முகவரியினைப் பார்க்கவும்.
http://www.public.navy.mil/surfor/ddg70/Pages/default.aspx